ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத2ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத3ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித4த்தாம் ஸத3ா ஹ்ருதி3 ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ அறிவது ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க3ராமாநுஜ மஹாதே3ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ அறிவது ॥

## திருப்புள்ளம்புதங்குடி

‡அறிவதரியான் அனைத்துலகும் உடையான்⋆ என்னை ஆளுடையான்⋆
குறிய மாணுருவாகிய⋆ கூத்தன் மன்னி அமரும் இடம்⋆
நறிய மலர்மேல் சுரும்பார்க்க⋆ எழில் ஆர் மஞ்ஞை நடம் ஆட⋆
பொறி கொள் சிறை வண்டிசை பாடும்⋆ புள்ளம் பூதங்குடிதானே (1)

கள்ளக் குறளாய் மாவலியை வஞ்சித்து⋆ உலகம் கைப்படுத்து⋆
பொள்ளைக் கரத்த போதகத்தின்⋆ துன்பம் தவிர்த்த புனிதன் இடம்⋆
பள்ளச் செறுவில் கயல் உகளப்⋆ பழனக் கழனி அதனுள் போய்⋆
புள்ளுப் பிள்ளைக்கிரை தேடும்⋆ புள்ளம் பூதங்குடிதானே (2)

மேவாவரக்கர் தென் இலங்கை⋆ வேந்தன் வீயச் சரம் துரந்து⋆
மா வாய் பிளந்து மல்லடர்த்து⋆ மருதம் சாய்த்த மாலதிடம்⋆
காவார் தெங்கின் பழம் வீழக்⋆ கயல்கள் பாயக் குருகிரியும்⋆
பூவார் கழனி எழில் ஆரும்⋆ புள்ளம் பூதங்குடிதானே (3)

வெற்பால் மாரி பழுதாக்கி⋆
விறல் வாள் அரக்கர் தலைவன் தன்⋆
வற்பார் திரள் தோள் ஐந் நான்கும்⋆
துணித்த வல்வில் இராமன் இடம்⋆
கற்பார் புரிசைசெய் குன்றம்⋆
கவின் ஆர் கூடம் மாளிகைகள்⋆
பொற்பார் மாடம் எழில் ஆரும்⋆
புள்ளம் பூதங்குடிதானே (4)

மையார் தடங்கண் கருங்கூந்தல்⋆ ஆய்ச்சி மறைய வைத்த தயிர்⋆
நெய்யார் பாலோடமுது செய்த⋆ நேமியங்கை மாயன் இடம்⋆
செய்யார் ஆரல் இரை கருதிச்⋆ செங்கால் நாரை சென்றணையும்⋆
பொய்யா நாவின் மறையாளர்⋆ புள்ளம் பூதங்குடிதானே (5)

www.prapatti.com

மின்னின் அன்ன நுண் மருங்குல்⋆ வேயேய் தடந் தோள் மெல்லியற்கா⋆
    மன்னு சினத்த மழவிடைகள்⋆ ஏழ் அன்றடர்த்த மாலதிடம்⋆
மன்னு முது நீர் அரவிந்த மலர்மேல்⋆ வரி வண்டிசை பாட⋆
    புன்னை பொன்னேய் தாதுதிர்க்கும்⋆ புள்ளம் பூதங்குடிதானே (6)

குடையா விலங்கல் கொண்டேந்தி⋆
    மாரி பழுதா நிரை காத்து⋆
சடையான் ஓட அடல் வாணன்⋆
    தடந்தோள் துணித்த தலைவன் இடம்⋆
குடியா வண்டுகள் உண்ணக்⋆
    கோல நீலம் மட்டுகுக்கும்⋆
புடையார் கழனி எழில் ஆரும்⋆
    புள்ளம் பூதங்குடிதானே (7)

கறையார் நெடு வேல் மற மன்னர் வீய⋆ விசயன் தேர் கடவி⋆
    இறையான் கையில் நிறையாத⋆ முண்டம் நிறைத்த எந்தை இடம்⋆
மறையால் முத்தீ அவை வளர்க்கும்⋆ மன்னு புகழால் வண்மையால்⋆
    பொறையால் மிக்க அந்தணர் வாழ்⋆ புள்ளம் பூதங்குடிதானே (8)

துன்னி மண்ணும் விண் நாடும்⋆
    தோன்றாதிருளாய் மூடிய நாள்⋆
அன்னம் ஆகி அரு மறைகள்⋆
    அருளிச்செய்த அமலன் இடம்⋆
மின்னு சோதி நவமணியும்⋆
    வேயின் முத்தும் சாமரையும்⋆
பொன்னும் பொன்னி கொணர்ந்தலைக்கும்⋆
    புள்ளம் பூதங்குடிதானே (9)

‡கற்றா மறித்து காளியன் தன்⋆ சென்னி நடுங்க நடம் பயின்ற⋆
    பொற்றாமரையாள் தன் கேள்வன்⋆ புள்ளம் பூதங்குடி தன்மேல்⋆
கற்றார் பரவும் மங்கையர் கோன்⋆ கார் ஆர் புயற்கைக் கலிகன்றி⋆
    சொல் தான் ஈர் ஐந்திவை பாடச்⋆ சோர நில்லா துயர் தாமே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com